மாநாட்டு மன்று
21-2-1994
யாழ்ப்பாணம்

இந்திய அரசு மீது தமிழக மீனவர்கள் சீற்றம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 9 இதழ் 11
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 21-2-1994

(சென்னை

இந்திய மீனவர்கள் கடலில் சென்று மீன்பிடிப்பதற்கு இருக்கும் உரிமைகளைக் காக்கவும், இந்திய மத்திய அரசு தவறிவிடாதே தமிழக மீனவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கச்சதீவுக் கடற்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை தமிழக மீனவர் இருவர் இலங்கைக் கடற்படையால் சுடுக்கொலைப்பட்டதை அடுத்து தமிழகத்தில் நேற்று இராமேஸ்வரம் மீனவர் மத்தியில் எழுந்த சோகம் ஏற்படுத்தியிருந்தது.

கடந்த ஐந்து மாதங்களில் இலங்கைக் கடற்படையினரின்

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கை அரசிடம் இந்தியா கோரிக்கை

(தொழும்பு)

இலங்கைக் கடற்படையின் அடாவடித்தனங்களை நிறுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தியா இலங்கையைக் கடுமை யாக வற்புறுத்தியுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கைக் கடற்படையால் துன்புறுத்தப்படுவதும், கொல்லப்படுவதும் இந்திய மத்திய அரசுக்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது. இது குறித்துத் தமிழகமுதல்வரும் மலத்த கண்டனம் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

● யுத்தம், சமாதானம் பேசி

ஆதாயம் தேடும் முயற்சியில்

டி. பி., ரணில் போலி நாடகம்

பி. பி. ஸி. விமர்சனம்

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க யுத்தம் பற்றிப் பேசிவருவதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சமாதானம் பற்றி கருத்துத் தெரிவிப்பதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதாயம் தேடும் வழிமுறைகள் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர் என்று 'பி. பி. சி.' சந்தேசிய தெரிவித்தது.

(4ம் பக்கம் பார்க்க)

கிழக்குதேர்தல் போலியானது மன்சூரிடம் பி.பி.ஸி. கேள்வி!

(லண்டன்)

கிழக்கில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி தேர்தல் நேர்மையான முறையில் நடைபெறுமா? அல்லது பல மோசடிகள் ஏற்படுமா என்பது குறித்து பி. பி. ஸி. கேள்வி எழுப்பியுள்ளது. இது குறித்து வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் பி. பி. ஸி.க்கு வழங்கிய பேட்டி கீழே தரப்படுகிறது.

கேள்வி: கிழக்கில் தேர்தல் நடாத்துவதற்கான சூழ்நிலை இல்லாத போதும் அரசு தேர்தல் நடாத்துவதற்கான உள் நோக்கம் என்ன?

பதில்: இப்பிரதேசங்களில் மக்களால் தெரிவு செய்யப் பெற்ற பிரதிநிதிகள் மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்பதே நோக்கம்.

கே: அரசு கிழக்கில் தேர்தல் நடாத்துவதற்கான

(4-ம் பக்கம் பார்க்க)

கோலோளிகளுக்கு ஜனாதிபதி உதவி

(கொழும்பு)

கொலைக்குற்றம் சாட்டி வழக்கு தொடரப்பட்டிருக்கும் இருசந்தேக நபர்களுக்கு ஜனாதிபதி டி. பி. விஜய துங்கா தனது அதிகாரத்தை பாவித்து விடுதலை செய்துள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீ சாவோ பண்டார

(4ம் பக்கம் பார்க்க)

30,000 படையினர் கிழக்கில் பாதுகாப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் தற்போது 30,000 படையினர் வரை நிலைகொண்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்காக இப்பகுதியில் பாதுகாப்பு பெருமளவில் பலப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்

(4-ம் பக்கம் பார்க்க)

விமானப் படையின் புதிய தலைமை அதிகாரி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா விமானப்படையின் தலைமை அதிகாரியாக ஏயர் கொமடோர் எம். பீரிஸ் நியமிக்கப்படவுள்ளார்.

இதற்கு முன்னர் இப்பதவியை வகித்த ஒலிவர் ரணதுங்க விமானப்படையின் புதியதளபதியாக நியமிக்கப்பட்டதை அடுத்தே எம்.பீரிஸ் விமானப்படை தலைமை அதிகாரியாக நியமிக்கப்படவுள்ளார்.

எம், ஐ 8 ரக விமானக் கொள்வனவிற்காக தற்போது

(4ம் பக்கம் பார்க்க)

புக்காரா, ஹெலி நகரில் நோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்றுக்காலை புக்காரா விமானம் ஒன்றும் ஹெலி ஒன்றும் வட்டமிட்டு நோட்டமிட்டன.

நேற்றுக் காலை 9 மணியளவில் நகரை சுற்றி வட்டமிட்ட புக்காரா விமானம் பின் மண்டைதீவுப் பகுதியூடாக சென்று விட்டது. இதைஅடுத்து ஹெலிகொப்டர் ஒன்று இரு தடவைகள் நகரை சுற்றி வட்டமிட்டது.

கடந்த சில தினங்களாக வலிகாமம் பகுதியில் கடும் விமானத்தாக்குதல் நடைபெற்று வருவதால் இப்பகுதியிலும் விமானத் தாக்குதல் இடம் பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (பி)

நம்பிக்கையில்லாப் பிரேரணைக் எதிரணிகள் முன்னறிவித்தல்

(கொழும்பு)

ஐ. தே. கட்சி அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான முன்னறிவித்தல் சபாநாயகர் எம். எச் முகம்மதுவிடம் சமர்ப்பிக்கப்படுவதாக அறியவருகிறது.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, மற்றும் ஸ்ரீ. ல. சு. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஸ்மன் ஜெயக்கொடி, கி. மு. குணரட்ண, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான தினேஸ்

(4-ம் பக்கம் பார்க்க)

நாளை முதல் பாணின் விலை ஒன்பது ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு அனுப்பும் உணவுப் பொருட்களுக்கான ஏற்பட்ட கட்டணத்தை பொருட்களை கொள்வனவு செய்வோரே பொறுப்பேற்க வேண்டும் என அரசு அறிவித்துள்ளதைதொடர்ந்து நாளை செவ்வாய் முதல் பாணின் விலை ஒன்பது ரூபாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமை

(4ம் பக்கம் பார்க்க)

கப்பல் கட்டணத்தை எதிர்த்து அரசு மீது பலத்த கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான உணவுப் பொருள் விநியோகத்திற்கான ஏற்பட்ட கட்டணத்தை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அரசை மிக வன்மையாக கண்டித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

(2-ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

சனி மாற்றம் (31-5-95) வரை

1-3-94 முதல் 2-7-94 வரை விநியோகக்கிரமம். ரூ. 10/- எங்கும் கிடைக்கும். (நூலாசிரியர் சதமாக) பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகள் உபகரணங்களுக்கு றெஜி புத்தகசாலை, ஆஸ்பத்திரி முன்னால், மானிப்பாய். (இ-314)

டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். உதிரிப் பாகங்களுக்காக நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூரியர் அருகில்) இலை: கண்டி வீதி, சாவகச்சேரி. (ஏ-3795)

வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், தொய்வு, வாத நோய்கள், வலிப்பு நோய், பீநிசம், தலைவிடி, தலைவலி, சரும நோய்கள், மாதவிடாய்க்குருத்து, இரத்தப் போக்கு, பெண்ணோக்கிவு, கருவழிதல், மலப்பேறின்மை, விரிவக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களின் பிரபலமான வைத்தியர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி கி. இராசரத்தினம் 181, 8-ம் குறுக்கு வீதி, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம். (இ-771)

வர்ண வேலைகள்

விளம்பரப் பலகை, இலக்கத் தகடுகள், மனித உருவப் படங்கள், கடைவர்ணம் தீட்டுதல், வீடுகளி வர்ணம் தீட்டுதல், கோவில்களி வர்ணங்கள், சாமி உருவப்படங்கள் ஆகிய வர்ண வேலைகளும் குறித்த தவணையில் ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும். பூபதி ஆட்ஸ் தொடர்பு முகவரி: டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூரியர் அருகாமையில்)

(ஏ 3845)

ஓய்வு

(ராயகச்சேரி)

42 வருடங்களாக உயிர்ஊழியராகி சேவையில் இருந்து சாவகச்சேரி நகராட்சிமன்ற ஆணையாளர் திரு. தி. நவரத்தினராஜா இளைப்பாறியுள்ளார். இவரின் இடத்திற்கு வவுனியாவில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு. இ. நடராசா நியமிக்கப்பட்டுள்ளார். -155-ரி

ஜொலி ஸ்ரூடியோஸ் நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரூடியோ விளையாடுக் கழகம் 1994-ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:- கி. இரகுநாதன், செயலர்:- ச. அறிவுச்செல்வன், பொருளாளர்:- சண். தயாளன், உப செயலர்] உப பொருளாளர்:- அ. ஞானேஸ்வரன் மேலும் 4 உப தலைவர்களும், 6 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (கி)

இளம் கலைஞர் மன்றம்

14 - வது இசை விழா

இடம்: **கலா மண்டபம்**

சங்கிலியன் வீதி, நல்லூர்.

10ம் நாள்

21-2-94 திங்கட்கிழமை

சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு

ப. நோ. கூ. சங்க ஆதரவில்

மாலை 4-00 — 5-00 மங்கள இசை

நாதஸ்வரம்: தவில்:
எஸ். ரமணன் — வீ. பாபு
ஆர். சிவசாமி — எஸ். ரஞ்சன்

5-00 — 5-10 மிருதங்க இசை

கே. சுரேஷ் — கே. நந்தகுமார்
பி. சதீஷ் — பி. பாலகுமார்

5-10 — 5 30 பாட்டு

பி. குமரேஷ் }
பி. சதீரேஷ் } பாட்டு
பி. சுதர்ஷா }
எஸ். கிஷலா — வயலின்
கே. கஜன் — மிருதங்கம்

5-30 — 5-50 வீணை, வயலினிசை

ஜெ. சிவசக்தி }
கி. கீர்த்திவளட்சுமி } வீணை
க. சரோஜினி }
அ. பிரியதர்சினி }
கி. சுவர்ணலட்சுமி } வயலின்
ஜெ. சிவச்செல்வி }
ப. ரதிரூபன் — மிருதங்கம்

5-50 — 6-15 பாட்டு

கே. கதர்கினி — பாட்டு
எஸ். கிஷலா — வயலின்
எக். கஜன் — மிருதங்கம்

6-15 — 6-45 பாட்டு

துஷ்யந்தி வெங்கேசன் — பாட்டு
எஸ். வெங்கடேஸ்வரசர்மா — வயலின்
எஸ். பாலச்சந்திரசர்மா — மிருதங்கம்

6-45 — 7-30 பாட்டு

பிரசாந்தி ராமச்சந்திரன் — பாட்டு
ஆர். எஸ். சேகரமூர்த்தி — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

7-30— 8-00 மங்கள விளக்கேற்றல்

திரு. மா. செல்வராஜா
(தலைவர், மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்)

திரு. மா. புவேந்திரன்
(தலைவர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. ச)

திரு. கி. கணேசராசா
(கணேசன் விளையாட்டுக் கழகம், திருநெல்வேலி)

திரு. வ. தவரூபன்
(ரூபன் எரிபொருள் நிலையம், திருநெல்வேலி)

தலைவர்: திரு. வை. செந்திநாதன்
(தலைவர், யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை)
(தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம்)

பிரதம விருந்தினர்:

திரு. நி. வைத்திலிங்கம்
(பிரதேச செயலர் / மேலதிக அரசாங்க அதிபர்)

சிறப்பு விருந்தினர்

திரு. வே. கிறிஸ்தோசன்
(தலைவர், வர்த்தக சங்கம் - யாழ்ப்பாணம்)

திரு. த. அன்னலிங்கம்
(செயலாளர், வர்த்தக சங்கம் - யாழ்ப்பாணம்)

8-00 — 9-00 வயலினிசை

சாந்தநாயகி சுப்பிரமணியம் — வயலின்
எக். கிருபாநாதன் — மிருதங்கம்
ஏ. செல்வரத்தினம் — கடம்

9-00 — 10 00 பரதநாட்டியம்

"திலக நர்த்தனாலய மாணவிகள்"
நெறியாள்கை: வசோதரா விவேகானந்தன்

வாழ்த்துவோர்:

செல்வராஜா
எரிபொருள் நிலையம்
திருநெல்வேலி

(ஏ 3826)

கப்பல் கட்டணத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா அரசு பல வருடங்களாக சர்வதேச சமுதாயத்தை ஏமாற்றி வரும் யுத்தமொன்றைத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. இந்நீண்ட மனித அர்த்தமற்ற போரினால் எம் மக்களின் பெறுமதிமிக்க சொத்துக்கள், மூலவளங்கள், பொருளாதார அபிவிருத்திகள் போன்ற இன்னும் பல வளங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. இதனால் உலக உள்ளரீதியாகப் பாதிக்கப்பட்டு பல அழிவுகளாலும் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளார்கள் என்பதை வரலாறு காட்டி நிற்கின்றது.

குறிப்பாக இரண்டாம் ஈழப்போர் தொடங்கியவுடன் பொருளாதாரத் தடை கோரப்பட்டதனால் அந்நியாகியப் பொருட்களுக்கான தவிப்பாடு, கப்பற் கட்டணத்த விலையேற்றம் என்பவற்றால் எமது மக்கள் நிலைகுலைந்து தடுமாறினர். அத்துடன் கடலையத் தடைச் சட்டம், போக்குவரத்துப் பாதை துண்டிப்பு, கைத்தொழிலுக்கான மூலப் பொருள் இன்மை, தொழிற்சாலைகள் மீது குண்டு வீச்சு ஆகியவற்றால் தொழில் வாய்ப்பை முற்றாக இழந்தனர். இதனால் எமது மக்கள் சந்தித்த சோதனைகளும், வேதனைகளும் அவல வாழ்க்கையும் எண்ணிலடங்கா தவை. குறிப்பாக வறுமை என்னும் கோரப்பிடிக்குள் சிக்குண்டு பட்டினிச்சாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே யாழ் மாவட்ட மக்களின் நெஞ்சைக் கசக்கி பிழிகின்ற அதிர்ச்சியான தகவல் வெளிவரகின்றது. இச் செய்தியின்படி "எதிர்காலத்தில் யாழ் மாவட்ட மக்கள் கப்பலில் வரும் உணவுப் பொருட்களுக்கு கப்பலில் கூலி செலுத்தி கூடுதல் விலை கொடுத்தே பொருட்களை பெறவேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், நீண்ட காலமாக யாழ் மாவட்ட மக்களின் உணவு விநியோகம், தேவையற்றி அரசுக்கும், அரச அதிபருக்கும் அழுத்தத்தைக் கொடுத்து வந்துள்ளது. யாழ் மாவட்ட மக்களுக்குத் தேவையான உணவை அனுப்பி ஏனைய கிளைமாவட்டங்களில் என்ன விலைக்குப் பொருள் விநியோகம் செய்யப்படுகின்றதோ அந்த விலைக்கே இங்கும் பொருள் விநியோகிக்கப்பட வேண்டும் இதுதான் அரசின் நாட்டமீது கடமையாகும். இதை விடுத்து தமிழ்மக்களை இரண்டாந்தர பிரஜைகளாக்கி பட்டினி என்னும் கோரப்பிடிக்குள் சிக்கவைத்து அழிவிக்க நரிவிலைக் கிந்திக்க விடாமல் தடுக்க முனைகின்றது. இலங்கையின் ஒரு பகுதிதான் வடக்கு - கிழக்கு என்று ஏற்றுக் கொண்டால் பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை என்பவற்றை நீக்கி விட்டு தென்னிலங்கை மக்கள் பொருட்களை பெறும்விலைக்கே இங்கும் பெற நடவடிக்கை எடுக்கட்டும். இதைச் செய்ய இயலாது போனால் எமது மண்ணிலிருந்து தமது பரிவாரங்களுடன் வெளியேறி விடுவதையே தமிழ் மக்கள் பெரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள்.

(4ம் பக்கம் பார்க்க)

31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் பொன்னையா தங்கராசா

மண்ணில்: 1935 - 04 - 21 விண்ணில்: 1974 - 01 -22

திதி: 21 - 02 - 94

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளி பரப்பி, எம்மை ஆளாக்கி இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

கமுனு ஏரி,
செட்டியார் தோட்டம், நல்லூர். (ஏ-3846)

அறிவித்தல்

பாண் ரூபா 9/-

22-2-94 முதல்

கப்பல் கட்டணத்தை பொருட்கள் கொள்வனவு செய்வோரே பொறுப்பேற்கவேண்டும் என்று சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனால் இன்றில் இருந்து மாவின் விலை கிலோ ஒன்றிற்கு ரூபா 4/- வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே பாணின் விலை நாளை செவ்வாய்க்கிழமை 22-2-94 முதல் 350 கிறாம் பாண் ஒன்று ரூபா 9/- என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

விலை, நிறை, தரம் ஆகியவற்றின் குறைபாடுகளை எமக்கு எழுதவும்.

தலைவர்,

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்,

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(சி-818)

மணிவாக்கு

இனம், பொருமை, வறுமை, பேதமை இல்லாத இல்லறமே நல்லறம்.

— தொல்காப்பியர்

நமது நோக்கு

யாரின் ஆதரவு?

"சிங்களவர்கள் ஒன்றிணைந்து இலங்கையில் தனி விருட்சமாக விளங்க வேண்டும். சிறுபான்மையினரான கொடிகள் அதனைச் சுற்றிப்படரலாம்!" என ஜனாதிபதி தெரிவித்த கருத்தைச் சாரு 7-2-94ல் "இந்து" ஆங்கில தினத்தலையங்கம் திட்டியுள்ளது.

ஜனாதிபதியின் அண்மைக் காலப் போக்கு, வடக்கிலே பயங்கரவாதம் எனக் கூறுவதும், தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இனவாதம் பேசுவதும் ஏனைய நாடுகளிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளதா?

'இந்து'வின் கருத்தும் இதனையா தெளிவாக்குகிறது?

இதைவிட இந்திய விதேசான வெளியுறவு அமைச்சர் ஹமீதுவின் பயணம் தடைபட்டதேன்? இலங்கை பற்றி இந்தியக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா?

இலங்கைத் தேயிலைத் தோட்டங்கள் கிலோவிற்கு நிர்ணயத்தை ஏற்ற இந்திய முதலாளிகள், ஏனைய நிர்வாகிகள் போல போதியளவு உரமிடாது தோட்டங்களைச் சுரண்டி கொள்ளை இலாபம் பெறுகிறார்கள் என்ற விஷமப் பிரசாரக் கண்டுரை ஒன்று 'சண்டே ரைம்ஸ்'ல் வெளிவந்துள்ளது.

இ. தொ. காங்கிரசைப் பிளவு படுத்துச்சதி தொடருவதும், மலையகத் தமிழர்கள் மீது இனத்துவேஷம் கிளப்பப்படுவதும் இந்தியக் கொள்கையில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்துகின்றனவா என்ற ஐயப்பாடும் எழுகின்றது.

இது மாத்திரமல்ல, காஷ்மீர் விவகாரத்தில் இலங்கையின் ஆதரவைத் தேட பாகிஸ்தான் முயற்சிக்கின்றது என்ற செய்தி வந்தது.

இன்றோ, சீன உதவிப் பிரதமரும், வேறு அமைச்சர்களும், அதிகாரிகளும் இலங்கைக்கு வந்து, விரிவான பொருளாதார உதவிகள் பற்றி ஆராய்வுகள் நடாத்தியுள்ளார்கள்.

இந்தியாவின் அரவணைப்பின் கீழ், பொருளாதாரத் துறை வளர்ச்சி சாணக்கியம் எனக் கூறிக் கொண்டிருந்த ஹமீது, இந்தியக் உதவு சாத்தியப்பட்டதும் என்ன செய்கிறார்?

ஜப்பான் முதலிய பல நாடுகளுக்கும் சென்று உதவுவதைத் தட்டிப் பார்க்கிறார்! எந்தக் உதவுவது திறக்கும், அதனால் எந்தக் உதவுகள் இழுத்துமூடப் மூடப்படும் என்பதெல்லாம் இப்போதைக்குக் கூறமுடியாது.

ஆனால் விடுவுகள் தெரியவராமலாபோகுமா?

படையின்தாக்குதலைகண்டித்து இந்திய மீனவர் மறியல்போர்

(சென்னை)

கச்சதீவுக் கடலுக்கருகில் நேற்று முன்தினம் இரு இந்திய மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து இராமேஸ்வரம் பகுதியில் மீனவர்கள் வீதி மறியல் மற்றும், ரயில் மறியல் போராட்டங்களை நடத்தினார்கள்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இம்மறியல் போராட்டத்தினால் இப்பகுதியில் ஒரு சில மணி நேரம் போக்குவரத்துச் சேவை ஸ்தம்பித்தது.

இலங்கைப் படையினர்கள் தாக்குதல்களினால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்றும் இவ்விடயத்தில் தமிழக அரசு கவனம் எடுக்கவேண்டும் என்பதனை வலியுறுத்தியே மீனவர்கள் இந்த மறியல் போராட்டத்தை நடத்தினர்.

நேற்று முன்தினம் அதிகாலை கச்சதீவிற்கு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை நோக்கி இலங்கைக் கடற்படையினர் ஏவுகணைகளைப் பிரயோகித்துச் சூடு நடத்தினார்கள். இச்சம்பவத்தில் இரு மீனவர்கள் இறந்ததுடன் ஒருவர் காயமடைந்தார். மீனவர்கள் வசமிருந்த பொருட்களும் மீன்பிடி வலைகள் ஆகியவற்றைப் படகிலிருந்து எடுத்துக் கடற்படையினர் கடலில் வீசினார்கள் என்றும் இராமேஸ்வரம் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. பி. ஞானப்பசாமி தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர் மதுரை அரசினர் பொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். -தி

இராசிபலன்

21 - 02 - 1994

திங்கட்கிழமை

(தமிழுக்கு மாசி 09)

தசமி: நண்பகல் 11-39 வரை. மிருகசீரிடம்: முற்பகல் 7-59 வரை. அமிர்த சித்தயோகம். இராகுகாலம்: காலை 8-01 முதல் 9-31 வரை. சுபநேரம்: நண்பகல் 12-31 முதல் 2-01 வரை.

மேடம்: கவலை தரலாம். பெரியோர் ஆசி. புதிய சிந்தனை.

இடபம்: கவலை. பழைய நினைவுகள். மனத்துயர்.

மிதுனம்: வசதிகளை இடமாற்றம். பொருள் வரவு. புகழ்.

கடகம்: தொழில் நஷ்டம். குடும்பப் பிரிவு. அகால உறவு.

சிங்கம்: நண்பர் உதவி. குடும்பசுகம். உற்சாகம்.

கன்னி: கலைத் துறை பெருமை. பெரியோர் சந்திப்பு. பயணமுண்டாகும்.

துலாம்: குடும்ப வேற்றுமை. மாமனார் தொல்லை. வேண்டாத பிரச்சனை.

விருச்சிகம்: அயலவர் சகவாசம். ஆலயம் செல்தல். விரோதம்.

தனுசு: தெய்வீகப் பணி. புத்திரர் பெருமை. புதிய முயற்சி.

மகரம்: வெளியூர் தகவல். திருமணயோகம். குதூகலம்.

கும்பம்: மனச்சலனம். சகோதர யோகம். காரியநடை.

மீனம்: வாகனப் பொருள் இழப்பு. கண்டனம். தொழில் சிக்கல்.

— ஜோஸ்யர்

அக்கினி ஏவுகணையின் மூன்றாவது பரிசோதனை!

(சென்னை)

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட நடுத்தர கொள்ளவு அக்கினி ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்பட்டது.

ஒரிஸா மாநிலம் சந்திப்பூர் கடற்பகுதியிலுள்ள ஏவுதளத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை 5-55 மணிக்கு இந்த ஏவுகணை விண்ணிற்கு செலுத்தப்பட்டது.

தரையில் ஒரு இலக்கிலிருந்து மற்றொரு இலக்குக்குச் செல்லும் பாய்ந்து தாக்கவல்ல அக்கினி ஏவுகணையின் மூன்றாவது பரிசோதனை முயற்சி இதுவாகும்.

இந்த ஏவுகணை 1500 முதல் 2000 கிலோ மீற்றர் வரையான இலக்கை தாக்கக்கூடியது. 2 மீற்றர் நீளம்கொண்ட அக்கினி ஏவுகணை ஒரு தொன் நிறையை எடுத்துச் செல்ல முடியுமென்று தெரிவிக்கப்படுகிறது. -தி

புத்திஜீவிகள் இனப்பிரச்னையில் அக்கறை கொள்ளவில்லை

— குமார் ரூபசிங்க

(லண்டன்)

சிறிலங்காவின் புத்திஜீவிகள் தமது வேலைத்தைத் திசைதிருப்பத் தவறிவிட்டதாக 'இன்டர்நாஷனல் அலேர்ட்' அமைப்பின் பொதுச் செயலாளர் குமார் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் வெளிவரும் பிரபல பத்திரிகையான 'இந்து'வுக்கு அண்மையில் வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இலங்கையில் அபிவிருத்தி மற்றும் ஏகாதிபத்தியம் தொடர்பாக ஆதிக்க வன்முறை செலுத்திவரும் புத்திஜீவிகள் இனப் பிரச்னை விவகாரம் தொடர்பாகப் போதிய கவனம் செலுத்தத் தவறிவிட்டனர்.

இனப் பிரச்னை விவகாரத்தால், இனப் பிரச்னை ஒன்று பாரிய அளவில் வெடிக்கும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. -தி

இராஜினாமா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மே.ப.நோ.கூ. சங்க சேவையாளர் கடமையிலிருந்து மூத்த தலைவர் பதவியிலிருந்து பொ. இராசநாயகம் இராஜினாமாச் செய்துள்ளார். -தி

ஊனமுற்றவர்களுக்கு உதவ 21 லட்சம் ரூபா ஒதுக்கீடு!

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்றோருக்கு உதவும் திட்டத்தின் கீழ் இவர்களுக்கென இருபத்தொரு லட்ச ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வை. எம். கி. ஏ. வினால் மேற்கொள்ளப்படும் இப் பணிக்கான நிதியை ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு உதவித் திட்ட (எவ். ஆர். ஜீ) அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைப்புக்குழு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பிறப்பினாலோ அன்றி பின்னரோ ஊனமுற்றவர்களுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. முச்சக்கர வண்டி, அலுமினிய செயற்கைக் கால், ஊன்றுகோல்கள், சக்கர வண்டி, காது கேட்பதற்குப் பயன்படுத்தும் சாதனம் என்பன இத்திட்டத்தின் கீழ் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இப் பொருட்களின் ஒரு தொகுதி விரைவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு உதவித் திட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்புச் செயற்குழு அரச சார்பற்ற நிறுவனங்களினூடாகப் பல்வேறுபட்ட பயிற்சி நெறிகளை ஆரம்பித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அறவழிப் போராட்டக் குழு, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் என்பன இப்பயிற்சி நெறிகளை மேற்கொள்வதுடன் தொடர்ந்தும் பல பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவருகின்றது.

தமிழ், ஆங்கில தட்டச்சுப் பயிற்சி, தட்டச்சு இயந்திரம் திருத்துவகை, நீரிறைக்கும் இயந்திரம் திருத்துதல், பின்னல், புத்தகம் கட்டுதல், மின்சார ஒட்டுவேலை போன்ற பயிற்சி நெறிகள் மேற்படி திட்டத்தின் கீழ் செயற்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. -158-தி

வீதியோரம் மரம் நடுவோம்
விழிகளைக் காத்திடுவோம்

திருவுருவப்படம் திரை நீக்கம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தயாள சீலன் கிறுவர் பூங்காவில் மறைந்த வீரச்சாவைந்த தமிழ் செல்வன் மேஜர் பாரதி (விஸ்லவிங்கம் சந்திரபாலகரவெட்டி) யின் பெரிய அளவிலான திருவுருவப்படம் கடந்த வாரம் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. 72-தி

மரிசில் பெற்றோர்

(வாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடாத்தப்படும் மரநடுகைப் போட்டித் திட்டத்தில் பாடசாலைகள், பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற மரநடுகை போட்டித்திட்டத்தில் ஓராண்டு நிறைவை முன்னிட்டு, வடமாகாண கோட்டத்தில் பாடசாலைகளுக்கான போட்டியில் முதலாம் இடத்தை துன்னாலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும், மாணவர்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை நெல்லியடி பொன்னம்பல வித்தியாலய மாணவன் வ. மதிக்குமாரும், இரண்டாமிடத்தை நாகர்கோவில் மகாவித்தியாலய மாணவன் கி. சிவரஞ்சனும், மூன்றாமிடத்தை நெல்லடி மத்திய மகாவித்தியாலய மாணவன் ஆ. ரூபகாந்தனும் பெற்றுக்கொண்டனர். -தி

இன்று

(வாழ்ப்பாணம்)

சங்கானை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று வலிகாமக் கோட்டை இந்துக்கல்லூரியில் இன்று நடைபெறவுள்ளது. —72

0 0 0

(வாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய், தெல்லிப்பழை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த ஆண்டு ஒன்பது வகுப்புகளுடைய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும். —தி

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உயிரி விவசாய ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் ஒய்வூதியம் பெறும் விவசாயிகளின் 1994 மாசி மாதத்துக்கான ஒய்வூதியக் கொடுப்பனவு இன்று 21-ந் திகதி கமத்தொழில் வளர்ப்புறுதிச் சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது. —தி

தவக்கால நற்சிந்தனை

"காலம் நிறைவேறிற்று; கடவுளரசு நெருங்கி விட்டது. மனந் திருப்பி, இந்த நற்செய்தியை நம்புங்கள்"

(மாற். 1: 15)

நமக்கு வாழ்வு தரும் வார்த்தைகள் வாயும் நற்செய்தியினை உண்டு நற்செய்தியைப் படிப்பதாலும் கடவுளரசை நாம் நெருங்க முடிகிறது. மனந்திருப்பி புது வாழ்வு காண, புதுவாழ்வு வாழ வழி பிறக்கிறது. எங்கும் அலைந்து உலைவதைவிட மனதிற்கு ஆறுதலும் வாழ்விற்கு வழிகாட்டும் நற்செய்தியினை நாளும் படிப்போம்.

-மோ. தாசீசியஸ்

மட்டு.மாவட்டத்தில் மேலும் 2 இராணுவமுகாம்கள் திறப்பு

(மண்டக்களப்பு)

மண்டக்களப்பு மாவட்டத்தின் பண்டிகைபன் பிரதேசத்தில் இரண்டு புதிய ராணுவ முகாம்களை இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

தாந்தாமலை தெற்கில் காட்டுப்பகுதியிலேயே இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 9ம் திகதி இந்தப் புதிய முகாம்களை ராணுவத்தினர் அமைத்தனர். தாந்தாமலையில் முகாம் அமைத்துள்ள ராணுவத்தினர் தாந்தாமலை பிள்ளையார் கோவிலிலும் தமது நிலைகளை அமைத்து நிலை கொண்டுள்ளனர்.

இதேவேளை பன்சூனிப் பகுதியிலும் புதிய முகாம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். கடந்த 6ம் திகதி அந்தப்பகுதிகளை பார்வையிட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மண்டக்களப்பில் பணிபுரிவோர் தமிழர் மீது பெரும் நெருக்கடிகளை மேற்கொண்டு வருவதும் தெரிந்ததே. (ம-கி)

உள்நாட்டு போரினால் ஐந்துலட்சம் சிறுவர்கள் இலங்கையில் அனாதைகள்

(லண்டன்)

உலகில் யுத்தம் சூழ்நிலை காரணமாக, கடந்த பத்து ஆண்டுகளில் பதினைந்து லட்சம் சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் அத்துடன் நாற்பது இலட்சத்திற்குக் அதிகமானோர் சித்த சுவாதீனம் மற்றும் அங்கவீனமடைந்துள்ளனர்

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தினால் சுமார் ஐந்து இலட்சம் சிறுவர்கள் அநாதைகளாகியுள்ளனர். அனாதைகளான பலரில் ஒரு பகுதியினர், ஆதரவற்ற நிலையில் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் உள்நாட்டுப் போரினால் அநாதைகளாகிவிட்ட ஐந்து இலட்சம் சிறுவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் தமிழர் ஆவர். தெற்கில் ஜே. வி. பி. காலத்தில் பல சிறுவர்கள் அநாதைகளாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. -கி

சித்த மருத்துவ மாணவர் கண்காட்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையில் சித்த மருத்துவ மாணவர் வாரத்தை முன்னிட்டு இன்று முதல் 13ம் திகதிவரை மாலை 'கண்காட்சி' நடைபெறவுள்ளது

இன்றைய நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக யாழ் பல்கலை. கழக துணைவேந்தர் பேராசிரியர் கு. தவராசாவும், சிறப்பு விருந்தினராக யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரும் கலந்து கொள்வர்.

காலை 9-30 மணி முதல் மாலை 4-30 மணிவரை நடைபெறும் இக்கண்காட்சியில் சித்தமருத்துவத்தின் பல்வேறு அம்சங்களை கொண்ட சிறப்பு மிகு கண்காட்சி இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (கி)

● பாகிஸ்தானில் 82 மாணவர்களுடன் பஸ் வண்டி கடத்தல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் சுற்றுலா மாணவர்கள் 82 பேர் பயணம் செய்து கொண்டிருந்த பஸ் வண்டி ஒன்று முன்று ஆயுதங்கள் தீவிரவாதிகளால் நேற்று கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

பெஷாவரிலிருந்து இஸ்லாமபாத் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் வண்டியே கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

மேற்படி மாணவர்களுடன் ஆசிரியர்கள் சிலரும் கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது இஸ்லாமபாத்தில் மணம் வைக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் சிறை வைக்கப்பட்டுள்ள ஆடகன் தீவிரவாதிகள் 70 பேரும் விடுவிக்கப்படவேண்டும் என்றும் ஆப்கன் அகதிகள் வருவதற்காகப் பாகிஸ்தான் எல்லைகள் மீண்டும் திறக்கப்படவேண்டும் என்றும் வாபூத் நவாஸுக்கு உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் கடத்தல்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனராம். க-கி

கப்பலி கங்கணத்தை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே பொருளாதாரத் தடை என்ற கோரக் பிடியிலிருந்து தன்மை மீட்டெடுக்க முடியாத மக்கள் அரசின் எழுந்த ரணமான கப்பல் கூலி என்ற பேரிடியில் அத்தியாவசிய பொருட்களான மரவு அரிசி, சீனி, பருப்பு, பால்மா உட்பட ஏனைய பொருட்களுக்கு கேலிகரமான விலையைக் கூறி விற்பனை செய்யவுள்ளது. இப்படிப்பட்ட விலை உயர்வை தெரிவிக்கையில் அரசு கைப்பிடிக்குமானால் அரசு தனது தலை விதியை நிர்ணயிக்கும் சூழ்நிலை ஏற்படும்.

'யாழ் மாவட்டத்தின் உணவுத்தேவைக்குப் பொறுப்பாக விருக்கும் அரச அதிபருக்கு, உணவு விநியோகத்தை மேற்கொள்ளும்திணைக்களப்பணியாளரும் இதுசம்பந்தமாக அரசுக்கு வலியுறுத்தி ஆவன செய்யுமாறு யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கின்றது. —கி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிளை கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ம் திகதி அச்சிடு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B

இந்திய அரசு மீது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்நிலைக்கு பதிலாக இந்திய மீனவர்கள் பலியாகியுள்ளனர். மூவர் காணாமற்போயினர். தொடர்ந்தும் இந்நிலை ஏற்பட்டால் நிலைமை மோசமாகும் எனத் தமிழக மீனவர் சங்கங்களும் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளன. -கி

இலங்கை அரசிடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விதித்து வருகிறார்.

இந்நிலையில் இலங்கை அரசு பலம் வாய்ந்த அண்டை நாடான இந்தியாவுடன் இப்பிரச்னை குறித்துத் தீர்வு காண, விரைவில் செயற்படவேண்டியிருக்கும் என பி.பி.சி தெரிவித்தது. -கி

நம்பிக்கையில்லாப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

குணவர்த்தனா, மற்றும் சில கலைஞர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் சிலரும் மேற்படி மனுவில் கை ஒப்பமிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வுகாணுமாறு அரச உயர் அதிகாரிகள் முரண்பாடான கருத்துக்களை வெளியிடக், வாழ்க்கைச் செலவு உயர்வை கட்டுப்படுத்தாமை, ஏயர் லங்கா நிறுவனத்தின் 'ஏயர் பஸ்' விமானங்களின் கொள்வனவில் அரச ஆதரவாளர் முறைகேடாக செயற்பட சந்தர்ப்பம் வழங்கியமை ஆகிய பல குற்றச்சாட்டுகள் தொடர்பாகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது,

அனேகமாக தென்மாகாண சபைத் தேர்தலின் முன்பாக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்றும் மேலும் தெரியவருகிறது. (க-கி)

விமானப் படையின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரஷ்யா சென்றுள்ள இவர் நாடு திரும்பியதும் புதிய பதவியை பொறுப்பேற்கவுள்ளார். க-கி

30,000 படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கண்டமாகவே மேற்படி படையினர், கிழக்கில் மூன்று மாவட்டங்களிலும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மண்டக்களப்பு மாவட்டத்திற்கு மேலதிகமாக 6 பொலிஸாரும், இராணுவத்தினரும் இவ்வாரத்தில் அங்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர். தேர்தல் கடமைகளுக்காக 6 000 பொலிஸார் வரை கிழக்கில் உள்ளதாகவும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. -கி

கொலையாளிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி

நாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

குருநாகல் நகரசபை உறுப்பினர், தனியார் போக்குவரத்துச் சபைத் தலைவர் டபிள்யூ. யு. சேமசிறிலபிரிவ், டபிள்யு எம் மந்துல ஜெயதேவ ஆகிய இருவரும் ஒரு ஆயுதவேந்த வைத்தியரை கொன்றதாக குருநாகல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவர்களுக்கு ஆதரவு வழங்கிய ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை நீதி மன்றத்தையே அவமதிப்பதாக உள்ளது என்றும் ஸ்ரீ லங்கா மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (ம - கி)

யுத்தம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பி. பி. சி. சந்தேசியாவிற்கு 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவிப்பதாவது: கிறிஸ்வ பௌத்த மக்களின் வாக்குகளை பெறுவதற்கு ஜனாதிபதி யுத்தம் பற்றி பேசுவது ஒரு கோணத்திலும், உதவி வழங்கும் நாடுகளை திருப்திப் படுத்துவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானம் பற்றி பேசுவதும் இந்த மையக் கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டே செயல்படுகின்றன.

இருந்த போதிலும் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் கரமினி திசநாயக்கா - பிரேமதாசா ஆதரவாளர்கள் என இரு பிரிவுகள் உண்டு. ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க தன்னைப் பலப்படுத்துவதற்காக தனது ஆலோசகராக விக்கிரம வீர சூரியாவை நியமிப்பதற்கு மீண்டும் எண்ணக் கொண்டுள்ளார்'' என்றார்.

கிழக்கில் உள்ளூராட்சி தேர்தலிலும், தெற்கில் தென் மாகாணசபைத் தேர்தலிற்கும் மற்றும் ஜெனிவாவில் நடைபெறும் 'ஜ. நா. மனித உரிமைகள் மாநாடு, உதவி வழங்கும் நாடுகளை திருப்திபடுத்தும் பல நோக்கங்களை கருத்தில் கொண்டே ஜனாதிபதி, பிரதமரின் அண்மைக்கால கருத்துக்கள் இருப்பதாகவும் பல பத்திரிகைகளும் கூறியுள்ளன. (ம - கி)

கிழக்கு தேர்தல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையான நோக்கம் கிழக்கில் நிலைமை பழைய நிலைக்கு வந்து விட்டது என்பதை உலகிற்கு காட்டி இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளிற்கு காண்பிப்பதற்காக என்று கூறப்படுகிறதே?

ப: அரசினுடைய முக்கிய நோக்கம் மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதே அரசியல் விமர்சகர்கள் கூறும் குற்றச் சாட்டிற்கு அரசு ஒன்றும் செய்ய முடியாது.

கே. உண்மையில் கிழக்கு மாகாணத்தில் அமைதி நிலவுகிறதா? கிழக்கில் தேர்தல் நடாத்த முடியுமா?

ப: கிழக்கில் பல கிராமங்கள், பகுதிகளில் நிலைமை சீராகவுள்ளது. இதனால்தான் முஸ்லிம் காங்கிரஸ் போன்ற இனவாதக் கட்சிகள் கூட நள்ளிரவு 12 00 மணி வரை தேர்தல் பிரசாரங்களை நடாத்துகின்றன.

கே: கிழக்கில் நிலைமை கட்டுப்பாட்டில் இருக்கிறதென்றால் அங்கு பெருமளவு துருப்புக்கள் குவிக்கப்படுவது எதற்காக?

ப: சில சமயங்களில் எதிர்பாராத தாக்குதல்கள் நடைபெறுகின்றன. இதிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும், நம்பிக்கை ஊட்டுவதற்குமே துருப்புக்கள் அங்கு குவிக்கப்படுகின்றன.

கே: ஐக்கிய தேசியக் கட்சி மிரட்டல்களுக்கு கைகாரியதாகவும், பொலிஸார்கூட ஆளும் கட்சியின் கைப்பொம்மையாகச் செயற்பட்டு வருவதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் குற்றம் சாட்டியிருக்கிறதே?

ப: இது உண்மைக்குப் புறம்பானது. எமது பிரதேசத்தில் என்செய்கைகளை தூண்டி வருவதும், என் செய்கைகளைப் பேசிவருவதும் முஸ்லிம் காங்கிரஸ் என்பதை இப்பிரதேச மக்கள் உணர்வார்கள்.

கே: ஆட்களைப் பயமுறுத்தி அவர்களின் மதம் வேண்பாடுகளை நிறுத்த அரசுத் தரப்பில் முயற்சி செய்யப்படக் கூறப்படுகிறதே?

ப: இக்குற்றச்சாட்டுக்கு எதுவித உண்மையும் இல்லை.

கே. ஹெலிகொப்டர்களைத் தேர்தல் பிரசாரத்திற்கு ஐக்கிய தேசியக்கட்சி பயன்படுத்துவதாக முஸ்லிம் காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளதே?

ப: அமைச்சர்கள் சில வேலைகளிற் ஹெலிகொப்டர்கள் மூலம் சில பகுதிகளுக்கு விஜயம் செய்கிறார்கள். முஸ்லிம் காங்கிரஸ் இதையிட்டுப் பொறாமைப்படுகின்றது. அவர்களும் அரசுக்குப் பணம் செலுத்தினால் ஹெலிகொப்டரைப் பயன்படுத்தலாம்.

கே: நீங்கள் வாடகை செலுத்தித்தான் ஹெலிகொப்டரில் பயணம் செய்கிறீர்களா?

ப. நான் அதிகாரக் வாடகை செலுத்தித்தான் பயணம் செய்வேன்.

கே: வாழைச்சேனை, தொலைக்காட்சியில் தங்களுக்கு பிரச்சார வசதி வழங்கப்படவில்லையென முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறதே?

ப: அவர்கள் அரசியலிலே உண்மைக்கு முரணானதைக் கூறுவதிலே பெயர் பெறுவர்கள்

கே: இவ்வசதிகளை எதிர்க்கட்சிகளுக்கும் வழங்குவதால் அரசுக்கு என்ன சங்கடம்?

ப: இவ்விடயத்தில் அரசு தரப்பினருக்கு விசேட சலுகை எதனையும் அரசு வழங்கவில்லை. இதுவரையில் அரசாங்க கட்சியை சேர்ந்த எவருக்கும் இப்பகுதியான பிரச்சார வாய்ப்பு வழங்கப்படவில்லை.

கே: உள்ளூராட்சி தேர்தல் நியாயமான சுதந்திரமான நேர்மையான தேர்தலாக இருக்குமென ஐ. தே. கட்சி உறுதி வழங்க முடியுமா?

ப: ஆம் உறுதி வழங்க முடியும்.

கே: இத்தேர்தலில் ஆளும் ஐ. தே. கட்சிக்கு வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?

ப: ஆம் அதிகமான பிரதேச சபைகளை ஐ. தே. கட்சி கைப்பற்றும் என்றார். (க-கி)

கிரிக்கெட்: மூன்றாவது இலங்கை வெற்றி

(புதுடில்லி)

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான 3-வது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய இந்திய அணி 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 213 ஓட்டங்களை பெற்றது. ரெண்டுல்கர் 51 ஓட்டங்களை பெற்றார்.

காலநிலை சீரற்ற போனதையடுத்து இலங்கை அணி 40 ஓவர்களில் 171 ஓட்டங்கள் பெற வேண்டும் என பணிக்கப்பட்டது. மீண்டும் காலநிலை சீரற்றுப்போனதால் 34 ஓவர்களில் 141 ஓட்டங்கள் பெறவேண்டும் என தெரிவிக்கப்பட்டது இலங்கை அணி 33 5 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 141 ஓட்டங்களை பெற்றது. அரவிந்த டி சில்வா சிறந்த ஆட்டக்காரராக தெரிவாகினார்.